செய்தி வெளியீடு எண் : 921 நாள்: 07.06.2022

**செய்தி வெளியீடு**

**இன்று 07.06.2022, அரசு செயல்படுத்தி வரும் மகப்பேறு மகளிருக்கான ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தில் இரும்பு சத்து சிரப்பின் விலை வேறுபாடு குறித்து வரப்பெற்ற செய்திக்கான விளக்கம்:-**

அம்மா தாய்சேய் ஊட்டச்சத்து பெட்டகத் திட்டம் 2018 ஆம் ஆண்டு முதல் அரசாணை: 118 குடும்பநலத் துறை (P2) தேதி 02.04.2018 மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது, 12.06.2018 தேதியிட்ட இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புத்துறை அவர்தம் கடிதத்தில் ஒவ்வொரு பெட்டகமும் ரூ.2000.00 மதிப்பில் 8 வகையான பொருட்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றும் ஒவ்வொன்றின் தரம் குறித்தும் குறிப்பிடப்பட்டு உள்ளது. இதில் இரும்புச் சத்து மற்றும் ஊட்டச் சத்துக்கள் நிறைந்த சிரப்பும் ஒன்றாகும். இதன் கொள்முதல் விலை 200 மி.லி. பாட்டில் ஒன்று ரூபாய். 74.66 (வரிகள் உட்பட). அம்மா தாய்சேய் ஊட்டச்சத்து பெட்டகத்தில் மூன்று 200 மி.லி பாட்டில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே மூன்று பாட்டில்களின் மொத்த மதிப்பு ரூபாய். 224.00 ஆகும். ஆனால் செய்தி குறிப்பில் அரசின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் பொருட்டு ஒரு பாட்டில் (200 மி.லி) ரூபாய்.224.00 க்கு கொள்முதல் செய்வதாக அடிப்படை ஆதாரமற்ற மற்றும் உண்மைக்கு புறம்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in